gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஹு புரட்டாதிமீ உகூஉ ( 1946 அக்டோபர் 15 செவ்வாய்க்கிழமை ) [இல ருகூ

# என்னே விதிப்பயன்!

## நாளை இறக்கும் ஜெர்மன் வீரர்

ஏறக்குறைய 15 ஆண்டு காலமாக ஜெர்மனியில் ஆட்சிபுரிந்து, உலகவல்லரசுகளை எல்லாம் ஓர்கலக்குக்கலக்கிவைத்து, சரித்திரத்தில் முன்னொருபோதுமில்லாதவாறு போர்புரிந்து திடீர் திடீர் என வெற்றிபெற்று உலகத்தைப் பிரமிக்கச்செய்து, பின் தோல்வியடைந்துள்ள ஜெர்மனிய அதிகாரிகளான கோயரிங் முதலாம் 11 ஜெர்மனிய வீரர் நாளைக்குத் தூக்கிலிட்டுக் கொல்லப்படுவர்.

இவர்களிற் சிலர் தமக்குமன்னிப்பு அளிக்கவேண்டுமென மன்ருடினர். அது வாய்க்கவில்லை. தாம் இறக்கவேண்டுவதாயின், தூங்கி மரணமாகாமல், யுத்த வீரரைப்போலத் துப்பாக்கியாற் சுட்டுக் கொல்லப்படவேண்டும் என நேசக்கட்சியினர்க்கு விண்ணப்பித்தனர். அந்த விண்ணப்பமும் புறக்கணிக்கப்பட்டது.

நாளை (புதன்கிழமை) இந்த 11 பேரும் கழுத்திற் சுருக்கிட்டு, கேவலம் சாதாரண கொலைக் குற்றவாளிகளைப்போல, தாம் எந்த நாட்டிலிருந்து, முன்னுதி மன்னரெல்லாம் தம் அடி பணியப் புவியாண்டனரோ, அதே நாட்டிற் கொலை செய்யப்படுவார்கள். என்னே விதிப்பயன்!

## மா கொடுக்கப்படும்

நேற்றுமுதல் (திங்கள்) ஆள் ஒன்றுக்கு வாரத்தில் ஒருபடி அரிசியும் ஒருருத்தல் மாவும் கொடுக்கப்படும் என அறிகிறேம். இதுபற்றிய விளம்பரம் இற்றைப் பிரசுரத்தின் பிறிதோரிடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது

## இலங்கையில் ஐரோப்பிய நாகரிகம்

பிரபல இந்திய எழுத்தாளரான ஸ்ரீ முல்க்ராஜ் ஆநந்த் இப்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறார். அவர் சென்ற சனிக்கிழமை கொழும்பில் நிகழ்ந்த ஓர் பொதுக் கூட்டத்தில் இலங்கை வாசிகளின் மேனுட்டு நாகரிக மோகத்தைக் கண்டித்துக் கூறினர். இலங்கையிலே திட்டமான தேசிய இயக்கம் எதுவும் இல்லை என்றும், இங்கே ஐரோப்பிய நாகரிகப் பற்றே அதிகரித்திருப்பது தமக்கு விசனத்தைக் கொடுக்கிறதெனவும் தெரிவித்தார்.

## சம்பளம் போதாது!

இலங்கையில் உள்ள நகரசபைகளில் கடமையாற்றும் 'கிளாக்'மார் தங்களுக்கு இப்போது அளிக்கப்படும் வேதனம் போதாது என்றும் இந்தச் சம்பளத்துடன் 100 க்கு 40 விகிதம் சம்பளம் அதிகரித்துத் தரவேண்டும் என்றும் அரசாங்கத்துக்கு மனுச்செய்திருக்கிறார்கள்.

## திரும்புகிறார்!

### சென்றவிஷயம்வாய்க்கவில்லை!

ரபர் தேயிலை முதலாம் பொருள்கள் விஷயமாகப் பேச்சுக்கள் நிகழ்த்தச் சென்றிருந்த சேர். ஒலிவர் குணத்திலகா இம்மாத முடிவுக்குள் இலங்கைக்கு மீண்டுவிடுவார் என்று தெரிகிறது. இவர் மேனுடுகளில் திரிந்து, அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே அடிக்கடி பறந்தும் றபர் விலை இருந்ததிலும் பார்க்க 29 சதம் குறைந்துவிட்டது,

சேர். ஒலிவர் குணத்திலகா சமரசம் செய்வதில் மேதாவி என்றிருந்த ஓர் பெயர் இம்முறை ஓங்கவில்லை. இவர் இங்கே மீண்டதும் துர் அதிர்ஷ்டவசமாக, கணக்குப் பரிசோதனை அதிகாரியின் அறிக்கையை நோக்குவார். சேர். ஒலிவர் குணத்திலகா ஸி டி ஸி. என்னும் ஊர்ப் பாதுகாப்பதிகாரியா யிருந்த காலத்திலே கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்தார். அது சம்பந்தமான பல ஊழல்கள் இப்போது வெளிவந்திருக்கின்றன. இவை எப்படி நிகழ்ந்தன என்பதை சேர் குணத்திலகா இந்நாட்டு மக்களுக்கு விளக்கி அவர்கள் கவலையைப்போக்க, அன்னுருக்கு ஓர் சந்தர்ப்பம் இருக்கிறது. அதனைப் பயன்படுத்திப் பொதுமக்களின் கிலேசத்தை அவர் நீக்க முன்வருவாரா?

## எதிரி விடுதலை

சாவகச்சேரியைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி என்பவரை அவ்வூர் செல்லப்பா தம்பிஐயா கத்தியால் வெட்டிக் கொலை செய்தார் என்று யாழ்ப்பாணம் சுப்பிறீம் கோட்டில் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில் எதிரி நிரபராதியெனக் கண்டு விடுதலை செய்யப்பட்டார்.

## 30 ஸ்தானங்களுக்கு 150 பேர் போட்டி

கொழும்பு நகரசபையில் உள்ள 30 பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களுக்கு 150 பேர் அபேட்சகர்களாக முன்வருவர் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## யூதரைக் குடியேற்றவே வேண்டும்

பலஸ்தீனத்தில் ஒரு லட்சம் யூதரைக் குடியேற்றவேண்டும் என்பதில் அமெரிக்க ஜனதிபதி மிஸ்டர் ட்ரூமன் பிடிவாதமாக நிற்கிறார். இப்போது லண்டனில் நடைபெற்றுமுடிந்த அரபு மகாநாடுகளின் முடிவு தெரியமுன், இந்தப் பிரச்சினையை ஆலோசித்தல் சரியல்ல என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி கூறிய ஆலோசனையை ட்ரூமன் நிராகரித்துவிட்டார்.

# பெரும் அநியாயம்!

(அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி திரு. K. கந்தையா எழுதி உதவியது)

மந்திரி சபையினரால் திருத்தியமைக்கப்பெற்று அரசாங்க சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபுதிய சம்பளத்திட்டம் கொலின்ஸ் - குணதிலகா திட்டத்திலும் பார்க்க சற்று முன்னேற்றமாகத் தோன்றிய போதிலும் அதிலும் அனேக குறைகள் காணப்பெற்றன. அக் குறைகளை எங்கள் சங்கங்கள் அதிகாரிகளுக்கு எடுத்துக் காட்டியும் ஒரு மாற்றமும் நடந்ததாகத் தெரியவில்லை. மற்ற உத்தியோகத்தருடைய சம்பளத்திட்டத்தோடு ஒப்பிடுகையில் எங்களுடைய திட்டம் ஏமாற்றத்தை அளித்துள்ளது. எங்களுடைய இலக்கை நாம் அடையவேண்டுமானல் நாம் உயர்தர உத்தியோகஸ்தருடைய சம்பளத்தைக் குறைக்கவும் குறைந்த படியிலுள்ள உத்தியோகஸ்தரின் சம்பளத்தைக் கூட்டவும் உழைக்கவேண்டும். கூடிய சம்பளத்தைப் பெறுகிறவர் ஒரே நேரத்தில் இரு கோப்பைகளில் சாப்பிடுகிறாரா அல்லது ஒரே நேரத்தில் இரு காரில் பிரயாணஞ் செய்கிறாரா? அரசாங்கம் நாகரீகமுள்ள நாடுகளில் நடப்பதுபோல் ஒரே தராதரப் பத்திரமுள்ளவருக்கு அவர் எந்த உத்தியோகத்திலிருந்தாலும் ஒரே சம்பளம் வழங்கவேண்டும். அல்லது விவாகஞ் செய்யாதவருக்கு ஒரு சம்பளமும் விவாகஞ் செய்து புத்திரபாக்கியமுள்ளவருக்கு பிள்ளைகளின் தொகைக்கேற்றபடி சம்பள ஏற்றமும் வழங்கலாம். எங்கள் இலங்கையில் ஒரு அடிப்படையான கொள்கையுமில்லை. சிவில் சேர்விஸ் உத்தியோகத்தரைத் தவிர்ந்த ஏனைய அரசாங்க உத்தியோகஸ்தர் சம்பளத்தைப்பற்றி ஒரு மனு குடியேற்றநாட்டு மந்திரிக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதில் அவர்கள் ரூஷியா, பிருத்தானியா, யப்பான், இலங்கை முதலிய தேசங்களிலுள்ள உத்தியோகத்தரின் கூடிய சம்பளத்தையும் குறைந்த சம்பளத்தையும் ஒப்பிடுகிறார்கள், அதில் அவர்கள் பிருத்தானியாவில் குறைந்த உத்தியோகஸ்தனுடைய சம்பளத்தைப் பார்க்க கூடிய உத்தியோகஸ்தனுடைய சம்பளம் பதினேழு (17) மடங்கு கூட என்றும், யப்பானில் ஒன்பது (9) மடங்கு கூட என்றும், ரூஷியாவில் மூன்று தசம் எட்டு (3.8) மடங்கு கூட என்றும் கூறியுள்ளார்கள். ஆனல் எங்கள் இலங்கையில் நூற்றுமுப்பது தசம் இரண்டு (130.2) மடங்கு கூட. இலங்கை அரசாங்கத்தில் வேலை பார்க்கும் கீழ் உத்தியோகத்தர் ஒருவர் இருபத்தெட்டு (28 ரூபா சம்பளம் பெறுகிறார். உயர்தர உத்தியோகஸ்தர் (பிரதான காரியதரிசி) மூவாயிரத்து எழுநூற்றைம்பது (3750) ரூபா பெறுகிறார். பிரித்தானியாவில் ஒரு சிவில் சர்விஸ் உத்தியோகத்தருடைய ஆரம்ப மாதச் சம்பளம் நூற்றெண்பத்தேழு ரூபா ஐம்பது சதம் (187-50) ஆனல் இலங்கையில் நானூற்றுமுப்பது (430) ரூபா. பிருத்தானியாவில் ஒரு கிளாக் (லிகிதர்) இனுடைய மாதச் சம்பளம நூற்றாறு ரூபா முப்பது சதம் (106.30) ஆனல் இலங்கையில் ஐம்பத்தைந்து (55) ரூபா. பிருத்தானியாவில் லிகிதருடைய சம்பளத்திலும் பார்க்க சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் ஒன்று தசம் ஏழு ஆறு (1.76) மடங்கு சம்பளந்தான் பெறுகிறார். அவர்களுடைய திட்டப்படி விவாகஞ் செய்யாத கந்தோர்ச் சேவகனுடைய மாதச் செலவு எழுபது ரூபா ஐம்பத்தொன்பது சதம் (70.59) விவாகஞ் செய்யாத நடுத்தர உத்தியோகத்தருடைய மாதச்செலவு நூற்றைம்பத்தெட்டுரூபா எண்பது சதம் (158.80) விவாகஞ் செய்த நடுத்தர உத்தியோகஸ்தருக்கு ஒரு பிள்ளையுமிருந்தால் அவருடைய மாதச் செலவு இருநூற்று முப்பத்தொன்பது ரூபா முப்பது சதம் (239.30)பிடிக்கிறதென்று புள்ளி விபரங்களுடன் நிரூபிக்கிறார்கள். இவைகளை ஆராய்ந்தபின் அவர்கள மிகக் குறைந்த படியிலுள்ள கந்தோர்ச் சேவகனுக்கு மாதம் அறுபது (60) ரூபாவும், மிக உயர்ந்த படியிலுள்ள உத்தியோகஸ்தருக்கு மாதம் ஆயிரத்து இருநூறு (1200) ரூபாவும் சிபார்சு செய்கிறார்கள். இவர்களுடைய திட்டப்படி மிகக் குறைந்த படியிலுள்ளவருடைய சம்பளத்தின் இருபதுமடங்கு சம்பளத்தைத்தான் மிகக் கூடியவர் பெறுவர். உலகத்தில் தலைசிறந்து விளங்கும் எங்கள் பிரித்தானியாவில் குறைந்தவர்களுக்கும் கூடியவர்களுக்கும் பதினேழு (17) மடங்குதானென்றால் எங்கள் சகோதரர்கள் சேட்பது குறைந்தவர்களுக்கும் கூடியவர்களுக்கும் இருபது (20) மடங்கு இருந்தாற் போதுமென்பது எவ்வளவு பொருத்தமானதும் நீதியானதுமாகும். அவர்களுடைய திட்டத்தைக் குடியேற்றநாட்டு மந்திரி ஏற்கும்படி செய்யப்பண்ணுவது எங்கள் கிளர்ச்சியில் தங்கியிருக்கிறது. அடிக்க அடிக்க அம்மியும் தகரும். சுயபாஷா ஆசிரியர் விஷயத்தில் உலகெங்கும் தேசிய பாஷைக்கும் தேசீய அரசாங்கத்திற்கும் மதிப்புக் கொடுக்கையில் 1951-ம் ஆண்டிலாவது ஆங்கில ஆசிரியர்களைப்போல் ஒரு தராதரப்பத்திர முள்ளவருக்கு ஆங்கிலம், சுயபாஷை என்ற பேதமில்லாமல் ஒரே சம்பளம் கொடுபடவேண்டும். இதைத் தேசீயப் பற்றுள்ள ஒருவரும் மறுக்கமாட்டார். சுயபாஷா ஆசிரியர்களுக்குப் பொது அறிவு சாணது என்று கல்வி மந்திரியோ அலலது வித்தியாதிபதியோ சொல்லும் நொண்டிச்சாட்டை நாம் ஏற்கமுடியாது. அப்படி அபிப்பிராயம் அவர்களுக்கிருந்தால் அவர்கள் ஓர் விசாரணைச்சபைமூலம் விசாரணை செய்து தாம் காணுங் குறைகளை ஒரு விசேட திட்டம் வகுத்து நிறைவாக்கி எங்களுக்கு 1951-ம் ஆண்டு சமமான சமபளங் கொடுக்கவேண்டும். இதற்கு அகில இலங்கைச் சுயபாஷா ஆசிரியர் சங்கம் முயற்சிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஸு
புரட்டாதி உகூஉ செவ்வாய்க்கிழமை


## யுத்தத்தின்பின் உணவு உடைப் பொருள்கள் நிலை

யுத்தம் நேர்ந்த காலத்திலே, ஊரிலுள்ள மக்களெல்லாரும், "யுத்தம் எப்போது முடிவுறும், உணவுப்பொருட்பஞ்சம் உடைப்பொருட் பஞ்சம், இன்னும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாப் பொருள்களின் பஞ்சம் எப்போது நீங்கும், இப்பஞ்சம் நீங்கிப் பழைய நிலைமை எப்போது வரு'மென்ற ஆவலோடு கூடியவர்களாயிருந்தார்கள்; நீண்ட கொடிய இரண்டாம் உலக யுத்தமும் ஒருவாறு முடிந்தது; அது முடிந்தும் ஒருவருடகாலமாகப் போகின்றது. ஆனல் இங்குள்ள மக்களுக்கு இன்றியமையாது வேண்டிய உணவுப்பொருட் பஞ்சமும் உடைப் பொருட் பஞ்சமும் இன்னேரன்ன ஏனைய பொருட் பஞ்சமும் குறைந்தபாடில்லை; குறைந்தபாடின்றி யுத்த காலத்தில் உள்ளபடி நிலையாய் நின்றாலும் மக்களுக்கு அதிககஷ்டமும் கவலையும் நேராவெனலாம்; உணவு உடைப் பொருள்கள் விஷயத்திலே யுத்த காலத்தில் நேர்ந்த பஞ்சத்தைக் காட்டிலும் கஷ்டத்தைக் காட்டிலும் இப்பொழுது இன்னும் மோசமான பஞ்சத்தையும் கஷ்டத்தையும் இங்குள்ள மக்கள் படவேண்டியவர்களானுர்கள்.

யுத்தகாலத்திலே, கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பிரதான உணவுப் பொருள்களாகிய அரிசி நெல் கோதுமையரிசி மா, ஏனைய வெஞ்சனங்கள் அந்த அந்த விகிதத்தின்படி முட்டின்றிவழங்கப்பட்டு வந்தன; விதிக்கப்பட்ட விகிதத்திற்கு இடையில் முட்டுப்பாடு வந்ததில்லை யெனலாம்; இந்நாட்டிலே அந்தக் காலத்திலே தங்கியிருந்த இராணுவப் பகுதியாருக்கும் ஊரவர்களுக்கும் விகிதப் பொருள்கள் பண்டங்கள் கிரமமாக வழங்கப்பட்டு வந்தனவென்பதை மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை; உடை விஷயத்திலும் கூப்பன்கள் கொடுத்து இயன்றவரையில், அக்காலத்திலே புடைவையினங்கள் ஒருவாறுவாங்கி உடுத்திக்கொள்ளத் தக்கதாயிருந்தன.

அவ்வாறு, யுத்த காலத்திலே விகிதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் அவ்விகிதத்திற் குறையாது கிரமமாக வழங்கப்பட்டு வந்த காரணம், "நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்" என்ற பிரகாரம், அந்த யுத்த காலத்திலே இந்நாட்டில் தங்கிநின்ற இராணுவத்தின் பொருட்டுக் கிரமமாய் உணவுப் பொருள் வழங்கவேண்டியிருந்தமையின், அதன் பயனுக ஊர்மக்களாகிய எங்களுக்கும் கிரமமாக உதவப்பட்டு வந்தமையே யென்று சொல்லப்படுகின்றது. ஆனல் யுத்தம் ஒருவாறு முடிந்துபோக, யுத்தவீரரும் இந்நாட்டைவிட் டகன்றுவிட, உலக சமாதானமும் உண்டாய்விட, "ஊரெச்சம் வீடுபட்டினி" என்றபடி, புறத்தே வெற்றியும் சமாதானமும் என்றபேர் பரவிவிட, நாட்டினகத்தேயுள்ள மக்களாகிய நாம் உணவுப் பொருள் விஷயமாகப் பஞ்சப்படவேண்டி நேர்ந்து விட்டது; யுத்தம் முடிந்தபின் புறநாடுகளிலிருந்து வரும் அரிசிக் கப்பல்களை நம்பியே இங்குள்ளமக்கள் காலங்கழிக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது; சிலவாரங்களில் ஒருபடி யரிசி அரைப்படியாக உதவப்படலாயிற்று; சில வாரங்களில் மாவின்றித் தனியே அரிசி மாத்திரம் வழங்கப்படலாயிற்று; மாவின்றி அரிசி அரைப்படி விகிதம் சென்றவாரம் கூட்டிக் கொடுச்கப்பட்டதெனினும், மாவின்மையால் இங்குள்ள மக்கள் பட்ட கஷ்டத்தை நாம் நேரில் அறிவோம். கோதுமையரிசி இங்குள்ள மக்களுக்கு உணவாகப் பெரிதும் பயன்பட்டு வந்தது; அது வாராதொழிந்தமையினலே மக்கள் படும் இன்னல் அதிகமெனலாம்.

இனி, யுத்தகாலத்திலே போதிய அளவிற்கு வாங்கத் தக்கனவாயிருந்த உழுந்து, பயறு, கடலை துவரைப் பருப்புக்கள் உருளைக்கிழங்கு முதலாம் பொருள்கள் இப்பொழுது சிலமாசங்களாக இல்லாதொழிந்தன; சில வாரங்கட்குமுன் வேற்றூரிலிருந்து பெருந்தொகையானஉருளைக்கிழங்கு ஏற்றப்பட்டு வருகின்றதென்ற சமாசாரங் கிடைக்க, அதனை இப்பத்திரிகையிலும் வெளியிட்டிருந்தோம்; உருளைக்கிழங்கு கொழும்பில் வந்து சேர்ந்ததென்பதையும் அறிந்தோம், ஆனல் அக் கிழங்குகள் இன்றும் யாழ்ப்பாணத்திலே சோரமாக விலைப்படக் கண்டோமேயன்றி இங்குள்ள சங்கக் கடைகள் 'சில்லறைக்' கடைகளில் ஒரு இருத்தல் கிழங்கேனும் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்படக் கண்டிலோம்; இதன் காரணமென்னவோ?

இவை இங்ஙனமாக, இந்நாட்டின் உடை நிலைமையை ஆராயப்புகின், அது வரவர மோசமான நிலைமையையடைந்து காலகதியில் நிர்வாண நிலைமையில் முடியுமென எண்ணி அஞ்சக் கிடக்கின்றது; யுத்தகாலத்தில் இந்நாட்டிற்கு வந்த புடைவை துணிகளிற் பாதிதானும் யுத்தம் முடிந்த இக்காலத்திலே வந்தபாடில்லை யெனலாம்; வருடத்தில் இருதுணி மாறிக்கட்ட வகையின்றிக் கூப்பன் கட்டுப்பாடு செய்த அதிகாரிகள், இப்பொழுது அதற்கும் வகையறியாமல் இங்குள்ள மக்கள் சஞ்சலப்பட விட்டு வாளாவிருக்கின்றார்கள்: அடுத்தவாரம் தீபாவலி நிகழப் போகின்றது; தமிழ் மக்களுட் பெரும்பாலார் வசிக்கும் இந்த வடமாகாணத்திலே, யாழ்ப்பாணப் பெரும் பிரிவிலே புடைவைக் கடைகள் எவைகளைப் பார்த்தாலும் வெறுமனே காணப்படுகின்றன; தப்பித் தவறிப் புடைவை எங்கேனும் கடைகளில் இருந்தாலும், கொடுத்து அவற்றைவாங்கக் கூப்பன் இல்லை; "மூன்றும்அயனக் கூப்பனை வெளிவிடுங்கள்" என்று புடைவைக் கட்டுப்பாட்டதிகாரிகளிடம் ஓலமிட்டாலும், அவர்கள் கேட்டுங் கேளார்போற் பராமுகஞ் சாதிக்கிறார்கள்; யுத்த காலத்தில் ஆறு நீண்ட முழுவருடம், அதன்பின் இப்பொழுது ஒருவருடமாக ஏழுவருடம், இன்னும் எத்தனை வருடங்களுக்கு இந்நாட்டிலுள்ள ஏழைமக்கள் கஷ்டப்படவேண்டி நேருமோ! இங்குள்ள செல்வமக்களெனிலோ, தீபாவலிக் காலத்திலாக, வேறுஎக்காலத்திலாக, தாங்கள் போதிய பணத்தைக் கொட்டிக் கொடுத்துச் சோர வியாபார மூலமாக, விரும்பிய புடைவை துணிகளைவாங்கிக்கொள்ளலாகுமென்ற துணிவுடனிருக்கிறார்கள்; ஆனல் ஏழைமக்கள் என் செய்வது?

மேலும், யுத்தகாலம் ஆறு வருடம் அதன்பின் ஒருவருடமாக ஏழுவருட காலம் இந்நாட்டிலுள்ள மக்கள் அரைவயிறு கால்வயிறு உணவை நேரந்தவறி யுண்டும், கட்டத் துணிக்குக் கஷ்டப்பட்டும் வருகின்றார்களே! இவர்கள் இன்னும் எத்தனை வருடகாலம் இப்படிப் பஞ்சப்படுவது? பாராளுமன்றப் பரிபாலனம் வருதற்கிடையில் இந்நாட்டு மக்களின் கதி யென்னுய்விடுமோ!. அந்தப் பரிபாலனந்தான் வந்தபின்னரும், இந்தப் பஞ்சங்கள் நீங்குமென எண்ண இடமில்லையே!

அயல்நாடாகிய இந்தியாவிலே உணவுப்பொருள் விஷயமாக, உடைப்பொருள் விஷயமாக இராஜேந்திரப் பிரசாத் முதலிய மந்திரிமார் செய்யும் திருத்தங்களையும் விருத்திகளையும் இலங்கையிலுள்ள மந்திரிகளும் அரசாங்கசபை அங்கத்தவர்களும் பார்த்து அவதானிக்கவொண்ணுதா? பின்பற்றவொண்ணுதா? அங்குள்ள சனத்தலைவர்கள் அப்படிச் செய்ய, இங்குள்ள மந்திரிமார் பாராளுமன்றத்திலே தாங்கள் மந்திரிமாராகவும் அங்கத்தவர்களாகவும் வருதற்கு முயற்சிசெய்துகொண்டு அந்தச் சிந்தனையாகவே இடர்ப்படுகின்றார்களாமே! இது என்ன விபரீதம்!

# 3-ம் உலக யுத்தம்

## ருஷியா ஆயத்தமா?

சோவியத் ரஷ்யா ஸ்டாலின் தலைமையில் மற்ெருரு யுத்தத்துக்குத் தயாராகி வருவதாகவும், இதற்கான ஆயுத உற்பத்தியில் ஸ்டாலின் கவனம் செலுத்தி வருவதாகவும், லண்டன் பத்திரிகையான 'நியூஸ் ஆப் தி ஓர்ல்டில்' ஒரு கட்டுரை வெளியாகியிருக்கிறது.

சமீபத்தில் ரஷ்யாவிலிருந்து அமெரிக்கா வந்துள்ள சோவியத் அதிகாரியான விக்டர்-க்ரேவ்சங்கோ தான் மேற்படி கட்டுரையை எழுதியிருக்கிறார். இவர் அந்தக் கட்டுரையில் கூறுவதாவது:—

"ஸ்டாலின் செலவையோ இதர கஷ்டங்களையோ பார்க்காமல் கூடிய சீக்கிரம் அணுக்குண்டைத் தயாரிக்கப்போவது நிச்சயம். இதற்கு அவருக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டியிருக்கிறது.

சமீபத்தில் யுத்தமில்லை என்று ஸ்டாலின் கூறியது தன் போர் ஏற்பாடுகளை மூடி வைப்பதற்குத்தான் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்டாலின் யுத்தம் சீக்கிரம் ஏற்படுமென்று நினைப்பதுடன் அவர் அதற்குத் தேசத்தைத் தயார்படுத்திக் கொண்டுமிருக்கிறார். ரஷ்யாவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள் இதை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

ரஷ்யாவின் புதிய ஐந்து வருடத் திட்டம், "சோவியத் யூனியனின் தற்காப்புச் சக்தியை அதிகரிக்க நவீன யுத்த சாதனங்களைத் தயார் செய்வதற்கு" வகுக்கப்பட்டுள்ளதிட்டமாகும். ரஷ்யாவின் ஆயுத உற்பத்தியை பதினெரு இயந்திர உற்பத்தி இலாகாக்கள் கவனித்து வருகின்றன. 1950க்குள் ஆயுத உற்பத்தி ஐந்து மடங்கு அதிகரித்து விடும். யுத்த தளபாட இலாகா நவீன ஆயுதங்களை உற்பத்தி செய்தவண்ணமிருக்கிறது. ஆயுதச்சாலைகள் இராப்பசலாக வேலை செய்கின்றன ராணுவக் கூடாரப்படை தளவாடஉற்பத்திக்கான புதிய தொழிற்சாலைகள் கட்டப்படுகின்றன.

யுத்த நிலைமையை ஏற்படுத்துவதாக பிறரை ஸ்டாலின் குறை கூறுகிறார். பிரிட்டிஷாரையும், அமெரிக்கரையும் ஸ்டாலின் ஹிட்லரைப் போல் குறை கூற ஆரம்பிக்கிறார். ஸ்டாலின் வார்த்தைகளும், செய்கைகளும் மாறுனவை. மேற்கு நாடுகளின்கண்களில் மண்ணைத்தூவ ஸ்டாலின் முயற்சிக்கிறார்.

ஸ்டாலினுக்கு அணுக் குண்டின் சக்தி என்னவென்றுதெரியும். அணுகுண்டு ஸ்டாலினுக்குக் கிடைக்குமானல் உடனே உலகப் புரட்சிக்கு அவர் அணுக்குண்டை உபயோகிப்பார். உலகப் புரட்சிதான் ஸ்டாலினின் லட்சியம்.

இன்று ஸ்டாலின் ரஷ்யாவை வைத்து ஒரு பெரிய சூதாட்டத்தில் இறங்கியிருக்கிறா. ருஷிய கொள்கைகளும் திட்டங்களும் என்னவென்பது ஐரோப்பிய மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

இன்று சமூகப் பொருளாதார சீர்திருத்தங்கள் மூலம் சுபீட்சத்தை நிலைநாட்டிவரும் இங்கிலாந்து தேசந்தான் ஸ்டாலினின் முதல் ராஜீய விரோதி.

## முஸ்லிம் தெருவில் மத்திய பாடசாலை

யாழ்ப்பாணம் முஸ்லிம்தெருவிலே ஒரு மத்திய பாடசாலையை அரசாங்கம் நிறுவவேண்டும் என்னும் ஓர் தீர்மானத்தை மிஸ்ரர் அப்துல் காதர் சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்த யாழ்ப்பாணம் நகரசபைக் கூட்டத்தில் எடுத்தாண்டார். ஸ்ரீ பதஞ்சலி அதனை அநுவதித்தார். தீர்மானம் சர்வாங்கீகாரமாக நிறைவேறியது.

## கொழும்பு விவேகானந்த சபை


ஐப்பசிச் சுவாதி நன்னுள் மெய்கண்டதேவரின் திருநக்ஷத்திரமாகும். அன்று (25-10 46) மேற்படிசபையின் ஆதரவில் திரு. சி முருகேசு அவர்கள் "மெய்கண்டாரும் சிவஞானபோதமும்" என்னும் பொருள்பற்றி ஒருவிரிவுரை நிகழ்த்துவார்கள்.

—கடிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் பணம் போன போக்கு!

## அம்பலப்படுத்துகிறார் ஸ்ரீ கனகரத்தினம்



யுத்தம் ஆரம்பமானதும் இந்த இலங்கையிலே "சிவில் டிபென்ஸ்" பகுதி என்னும் ஊர்ப் பாதுகாப்புப் பகுதி ஒன்றை அரசாங்கம் அங்குரார்ப்பணம் செய்தது. இப்பகுதிக்கு அதிகாரியாக சேர் ஒலிவர் குணதிலக நியமிக்கப்பட்டார் இந்த ஊர்ப் பாதுகாப்புப் பகுதி ஏறக்குறைய 5 ஆண்டு காலமாக இந்த இலங்கையில் வேலை செய்தது.

இந்த ஊர்ப் பாதுகாப்புப் பகுதி 1941—42, 1942—43, 1943—44, 1944—45 என்னும் 4 ஆண்டுகளில் 3 கோடியே 33 லட்சத்து முப்பத்து நான்காயிரத்து நானூற்றூறு ரூபா செலவழித்துவிட்டது. இந்தப்பெருந் தொகையான பணம் எப்படி, எங்கே ஏன் செலவழிக்கப்பட்டது என்பதற்கு இதுவரை பகிரங்கமான கணக்கு வெளிவரவில்லை: அதனை மூடு மந்திரமாகவே அரசாங்கம் வைத்திருந்தது.

ஊர்ப் பாதுகாப்புப்பகுதிப் பரிபாலனத்திலே பாரதூரமான ஊழல்கள் நடந்திருக்கின்றன என்று கணக்குப் பரிசோதனையதிகாரி ஸ்ரீ கனகரத்தினம் அவர்கள் பலமுறைகளில் முறையீடு செய்திருக்கிறார். அவர் இவ்விஷயமாக 1941—42, 1942—43 என்னும் இரண்டு ஆண்டுக் கணக்குகளைப் பரிசோதனை செய்து வெளியிட்ட அறிக்கை பகிரங்கமாகவில்லை ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுக்கான அறிக்கை, அரசாங்கசபையின் உத்தரவுப்படி இப்போது வெளிவந்திருக்கிறது.

இந்த இலங்கைமக்கள் வரிப்பணமாகவிறுத்த அரசிறை எவ்வாறுசெலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஸ்ரீ கனகரத்தினம் மிகவும் நுணுக்கமாகக் குறித்த இந்த அறிக்கையில் காட்டுகிறார்.

1942-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஓர் துண்டுக்காணியில், அரசாங்கம் ஓர் அறிவிப்பு நிலையத்தை ஸ்தாபித்தது. அதற்குள் ஓர் வீடும் இருந்தது. அந்த வீட்டில் அதன் சொந்தக்காரரும் அவர் குடும்பத்தினரும் வசித்துவந்தனர். ஆனால், அரசாங்கம் முழு வளவுக்கும், அந்த வீட்டுக்குமாகச் சேர்த்து வாடகை அந்தச் சொந்தக்காரர்க்குக் கொடுத்து வந்தது. சொந்தக்காரர் அந்த வீட்டின் முக்காற் பாகத்தைத் தமது சொந்தப் பாவிப்புக்கு உபயோகப்படுத்திய போதிலும் அரசாங்கம் வாடகை கொடுத்துக்கொண்டே வந்தது.

வீடு வளவுக்குக் கொடுத்த வாடகையுடன் நிற்கவில்லை அந்த வீட்டிலேயிருந்த நாற்காலி மேசை முதலாம் தளபாடங்களுக்கும் வேறாக வாடகை கொடுக்கப்பட்டு வந்தது இந்தத்தளபாடங்களில் மிகச் சொற்பமானவற்றையே அரசாங்கம்தனது அறிவிப்பு நிலையத்துக்காகப் பாவித்தது. மற்றும் தளபாடங்களை வீட்டுச் சொந்தக்காரரே உபயோகித்தார்.

குறித்த அறிவிப்பு நிலையத்திலே ஓர் சிற்றுண்டிச்சாலை வைத்து நடாத்தப்பட்டது. அது அறிவிப்பு நிலையத்தில் வேலைசெய்யும் ஆட்களின் உபயோகத்துக்காகவாகும். அந்நிலையத்தில் வேலை செய்தவர்களின் தொகை 20 பேர்மாத்திரமே. இந்த 20 பேர்க்கும் உணவு முதலாம் பண்டங்கள் ஆக்கிக்கொடுக்க 8வேலைக்காரர் இருந்தனர். இந்த வேலைக்காரர்க்குரிய சம்பளம் அரசாங்கத்தாலேயே கொடுக்கப்பட்டது. இங்கே ஓர் தனி ஆளுக்குக் கொடுக்கும் உணவுக்கு மாதந்தோறும் 88 ரூபா தொடக்கம் 100 ரூபா வரையில் செலவானது. இந்த உணவுச்சாலைக்கு வீட்டுச்சொந்தக்காரருடைய மனைவியே மேற்பார்வை செய்துவந்தார். ஆனால் அந்தப் பெண் எப்படி மேற்பார்வை செய்தார் என்பது புரியவில்லை கணக்குப் புத்தகங்கள் ஒழுங்காக வைக்கப்படவில்லை. வரவு செலவு விபரம் எழுதப்படவில்லை. இந்த உணவுச்சாலையில், சாதாரண உணவுப் பொருள்கள் வழங்கப்படவில்லை, எல்லாம் விலையுயர்ந்த உணவுப்பொருள்களே வாங்கி ஆக்கப்பட்டன: நெருப்பணைக்கும் படையினர் ஏ. ஆர். பி. படையினர்க்குக் கொடுக்கப்பட்ட சாப்பாட்டிலும் பார்க்க இங்கே எல்லாம் விசேஷ உணவுகள் வழங்கப்பட்டன. ஏ. ஆர். பி. போசனச் சாலையில் ஓர் ஆளின் உணவுக்கு மாதம் 40 ரூபா முடிந்தது. "நேர்ஸ்"மாருக்கு உணவுக்காக அரசாங்கம் கொடுப்பது 45 ரூபா. ஆனால் இந்தப் போசன சாலையில் ஒரு ஆளுக்கு மேலே காட்டிய தொகை பிடித்தது.

குறித்த அறிவிப்பு நிலையம் இருந்த வீட்டுக்காரர் உபயோகித்த மின்சாரம், "காஸ்" (Gas) என்பவற்றுக்குமான செலவை அரசாங்கமே கொடுத்தது.

இந்த ஒழுங்கீனங்களை யெல்லாம் ஸி. டீ. ஸிக்குக் காட்டினேன். இந்த ஒழுங்கீனங்களுக்கான காரணங்கள், நியாயங்கள் எவை என்பதைக் கூடிய சீக்கிரத்திலே அறிவிக்கும்படி எழுதினேன். ஸி. டி. ஸி மறுமொழி எழுதினார், குறித்த வீட்டின் ஓர் பகுதியில் சொந்தக்காரர் இருப்பது என்ற நிபந்தனையுடனும், அங்கே ஸ்தாபிக்கப்படும் சிற்றுண்டிச்சாலையின் மேற்பார்வையாளராக வீட்டுச் சொந்தக்காரரின் மனைவியை வைக்கவேண்டும் என்னும் நிபந்தனைகளுடனும், வீட்டுச் சொந்தக்காரர் பாவிக்கும் தளபாடங்களுக்கும் சேர்த்தே வாடகை தரவேண்டும் என்ற நிபந்தனையுடனும் தான் குறித்த வீட்டை ஆரம்பத்தில் அரசாங்கம் வாடகைக்கெடுத்ததென்றும், சொந்தக்காரர் மனைவி சம்பளம் வாங்காமல் மேற்பார்வை செய்தபடியினால், அவளைக் கணக்குகள் வை என்று கட்டாயப்படுத்த முடியாதென்றும் ஸி. டி. ஸி. தெரிவித்தார்.

குறித்த வீட்டின் ஓர் பகுதியில் சொந்தக்காரரும் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை, இவ்விஷயமான சாதன[illegible] [illegible] அது ஒழுங்கீனமாகும் என்றும் தெரிவித்தேன். அதுமாத்திரமன்றி, அரசாங்கம் உபயோகித்த இடத்துக்கு மாத்திரமே வாடகை கொடுக்கலாம் என்றும், முழு வீட்டுக்கும், முழு மின்சாரச் செலவுக்கும் கொடுக்க முடியாது என்றும், நான் தெரிவித்[illegible] செலவினங்களை அங்கீகரிக்க மறுத்துவிட்டேன்.

(வரும்)

# இலங்கை ஆஸ்பத்திரிகள்!

## கேவல நிலைக்கு மந்திரியே பொறுப்பாளி!

"இலங்கையில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளின் நிலைமையை அறிவதற்கு ஓர் விசாரணைச்சபை நியமிக்கப்பட்டிருக்கிறது. இது வீண் வேலை. அப்படியான விசாரணை வேண்டியதில்லை" என்று இலங்கையிற் பிரபல மேனாட்டு வைத்திய நிபுணரான டக்ரர் ஆ. எல். ஸ்பிற்றெல் ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினார்.

"இலங்கையிலே சுகாதார மந்திரியும் அவருடைய நிருவாகசபையினரும் 10 ஆண்டு காலமாகக் கருமம் ஆற்றினார்கள். இவர்கள் எப்படிக் கருமம் ஆற்றினார்கள் என்பதை விசாரித்தறிய ஓர் சபையை நியமித்தால் அது மிகவும் பொருத்தமாகும் என்பதே எனது அபிப்பிராயம்.

"இந்த நாட்டு ஆஸ்பத்திரிகளிலேயுள்ள குறைகளை அறிவதற்கு ஓர் சபை வேண்டியதில்லை அக்குறைகள்யாவரும் அறிந்தனவாகும். இந்த ஆஸ்பத்திரிகள் எங்கள் மந்திரியின் கீழ் மிகவும் கேவலமான நிலையில் இருக்கின்றன என்று டக்ரர் ஸ்பிற்றல் கூறினர்

## சுதந்திரமற்ற பாவியர்

(சுதந்திர)

தேவி! நின்னொளி பெறாத  
 தேயமோர் தேயமாமோ?  
ஆவியங்குண்டோ? செம்மை  
 அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?  
காவியநூல்கள் ஞானக்  
 கலைகள் வேதங்கள் உண்டோ?  
பாவியரன்றோ நின்றன்  
 பாலனம் படைத்திலாதார்!

—பாரதி

## பாகவதர், கிருஷ்ணன் விடுதலை?

சென்னை இந்துநேசன் பத்திராதிபர் லக்ஷ்மிகாந்தம் என்பவரைக் கொலை செய்தனர் என்ற குற்றத்தின் பேரில் ஆயுட்கால தண்டனையடைந்துள்ள பிரபல சினிமா நடிகர்களான எம். கே. தியாகராஜ பாகவதர், என். எஸ். கிருஷ்ணன் என்பவர், தமக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு விரோதமாக லண்டன் உயர்தர நீதிமன்றத்துக்கு மனுச் செய்திருக்கிறார்கள். இதற்கிடையில் இந்தியாவின் பல பாகங்களிலுமிருந்தும் சென்னை அரசாங்கத்துக்கு மனுக்கள் வந்தவண்ணமாயிருக்கின்றன. குறித்த இரு நடிகரையும், மன்னிப்புச் செய்து விடுதலையாக்கவேண்டுமென்பதே இம் மனுக்கள். லண்டன் உயர்தர நீதிமன்றம் எந்த விதமான தீர்ப்பைச் செய்யப்போகிறது என்பதைச் சென்னை அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்ததும், உயர்தர நீதி மன்றத்திலும், தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டால், சென்னை அரசாங்கம் இந்த இரு நடிகர்கள்மீதும் இரக்கம் பாலித்து விடுதலை செய்யலாம் என்று ஓர் செய்தி கூறுகிறது.

## இலங்கைத் தமிழர்கலா விருத்திச்சங்கம் கோலாலம்பூர்

நவராத்திரி நாளாகிய விஜயதசமியன்று வியஅ புரட்டாதிமீ ககூ (5-10-46 மேற்படி சங்கத்தாரால் பரிபாலிக்கப்படும் வித்தியாசாலை மாணவர்களால் ஓர்நாளுவிதக்காட்சி சங்கமண்டபத்தில் மாலை 7 மணிக்கு ஆரம்பமாயது வந்தனோபசாரக் கீதங்கள் மிகவுந் திறமையாகப் பாடப்பெற்றன சிறுமிகள் கும்மியடித்துப் பாடின பாடல்கள் நல்லகருத்துக்களை வெளியிட்டன. நடிக்கப்பெற்ற இரண்டு சிறுநாடகங்களும் கற்பனையடங்கியதோடு சிலநடிகர்களின் அபிநடங்களும் சபையோருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன, 'நவாணங்கள்' ஏந்தியபடி நடித்த நடனங்கள் சிரத்தையுடன் நடிக்கப்பெற்றன. குடை, தீபவேள்வி, ஆடல் ஈற்றில் சபையோரால் நன்கு வரவேறகப்பட்டன.

வித்தியாசாலையின் தலைமையாசிரியர் ஸ்ரீமாந் வே கதிரேசு. அவர்கள் சுருக்கமக நவராத்திரிப் பண்டிகையின் பூர்வீகத்தைக்கூறி, தமிழ்க்கலையில் ஆர்வங்குன்றுதிருக்கும் வண்ணம் நல்லுணர்ச்சி ததும்ப வற்புறுத்திப் பேசினர் சபைத் தலைவர் ஸ்ரீமாந். மு. கனசபை அவர்கள் சபையோருக்கும், உதவிபுரிந்தவர்களுக்கும் சங்கச்சார்பால் வந்தனங் கூறினர், பிரம்மஸ்ரீ. A. ராமானுஜ ஆச்சாரி அவர்கள், (T. V. T. Selangor வித்தியாசாலையின் வளர்ச்சியை வியந்தும் ஆசிரியர்கள் சிறுவர்களை ஆடல்பாடல்களில் அப்பியாசப்படுத்த ஆற்றும் தொண்டையும் புகழ்ந்து பேசினர். —கடித.

## கற்கிசை இந்துஇளைஞர் சங்கம்

நிகழும் புரட்டாதித் திங்கள் 19-ம் நாள் (5 10-46) விஜயதசமிக் கொண்டாட்டம் கல்கிசை இந்துஇளைஞர் சங்கத்தாரால் விகாரலேன் 3-ம் இலக்கஇல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது தமிழன்பர் திரு. சி. பெரியதம்பி அவர்கள் அச்சமும் பேராசையும் ஒழித்துத் திடசித்தத்துடனும் மனச்சாந்தியுடனும் தமிழன் வாழ்ந்து அறிவும் ஆற்றலும் பெற்று. முத்திப் பேற்றிற்கு இலக்காக வேண்டுமென்பதைத் தமிழ்நாட்டுக் கதைகளிலிருந்தும் மேல்நாட்டு உளநூல் ஆராய்ச்சியிலிருந்தும் சைவநாயன்மார்களின் வாழ்க்கையிலிருந்தும் எடுத்துக்காட்டுகளால் விளக்கினர். மேலும், தலைவராகிய சிவபிரானல மக்களுக்குத் தனுகரண புவனபோகங்கள் உதவப் பெற்றதும் இவ் வீரவாழ்க்கை நடத்துவதற்காகவே எனறு கூறினர். திடசித்தமுள்ளவர் தாம் இந்திரியங்களை வசப்படுத்தி அவைகளுக்கு அடிமையாகாமல் வாழமுடியும் என்றுங் கூறினர் திரு சி முருகேசு அவர்கள் நன்றிகூறி சீரிய ஒழுக்க வாழ்க்கைக்கு அடிப்படையாகவுடையது எதவென்பதை விளக்கினர்.

—கடித.

## தேவை

சுன்னாகம் ஐக்கிய பண்டகசாலைக்கு ஒரு காரிய முகாமைக் காரரும், ஒரு விற்பனைக்காரரும் தேவை. காரியமுகாமைக்காரர் 25 வயதிற்கு மேற்பட்டவராயும், வியாபார முறையில் தேர்ச்சியுள்ளவராயும், கடிதங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுத வாசிக்கக் கூடியவராயும், 500 ரூபா ரொக்கப்பிணை கொடுக்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும் விற்பனவுக்காரர் 21 வயதிற்கு மேற்பட்டவராயும், விற்பனவுத் தொழிலில் தேர்ச்சி பெற்றவராயும் தமிழில் எழுதவாசிக்கத் தெரிந்தவராயும் 200 ரூபா ரொக்கப்பிணை கொடுக்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுவோர் 1-11-46 ல் வேலையை ஒப்புக்கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

காரிய முகாமைச்காரருக்கு மாதவீதம் 75 ரூபா சம்பளமும், விற்பனவுகாரருக்கு மாதவீதம் 40 ரூபா சம்பளமும் வருடமுடிவில் உபகாரப்பணமும் கொடுக்கப்படும்,

விண்ணப்பஞ் செய்ய விரும்புவோர் 23-10-46 க்கு முன்னர் ஷை சங்கக் காரியதரிசிக்கு நற்சாட்சிப் பத்திரங்களுடன் தங்கள் விண்ணப்பப் பத்திரங்களை அனுப்பவும்.

ஆ. சிவசங்கரப்பிள்ளை,  
கௌரவ காரியதரிசி.

சுன்னாகம்,  
14-10-46.

Mis 193 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

# சைவசமயமே சமயம்

"சர்வமதசம்மதம்" என்னும் மகுடத்தோடு 2-9-46 ல் வெளியான இந்துசாதனத்தில் பிரசுரிக்கப்பட்ட எனது கடிதத்தில் கிறிஸ்துநாதர், புத்தர், முகமதுநபி முதலியவர்கள் சீவன் முத்தர்களல்லரென்றும் அவர்கள் நாட்டிய சமயங்களும 'புல்லறிவிற் பல்சமயங்க" ளென்றும் சைவசமயமொன்றே மெய்ச் சமயமென்றும் எடுத்துக் காட்டியது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம், Mr. S Bariachia இவ்வுண்மையை 13-9-46 ல் வெளியான "சத்தியவேதபாதுகாவலன்" என்னும் பத்திரிகை வாயிலாக மறுத்துக் கிறிஸ்துநாதர் கடவுளே யென்றும் அவர் உண்டாக்கிய கிறிஸ்து மதமே முத்திகொடுக்கும் மெய் சமயமென்றும் கூறுவதோடு தமது கூற்றுகளுக்குச் சில நூல்களையும் ஆதாரமாகக் காட்டுகின்றார்.

கிறிஸ்துநாதர் மனிதனேயன்றிக் கடவுளல்லரென்பது பல ஆண்டுகளுக்கு முன்னரே ஸ்தாபிக்கப்பட்ட விஷயமாகும். யேசுகிறிஸ்துவின் பெருங்குணம், கிறிஸ்து சமயத்தின் தற்கால நிலைமை, சீவன்முத்தர் யார் முதலிய சிறு நூல்கள் மேற்படி கொள்கையை வலியுறுத்துவனவாம். கிறிஸ்துநாதரைப்போலவே அவரைத் தேவரென்றுகருதிய இராமக்கிருஷ்ணரும், விவேகானந்தரும் மனிதர்களேயாம். ஆனால் கடவுட் பக்தியிற் சிறந்தவர்கள். சைவர்களல்லர்.

உண்மைச்சமயத்தின் இலக்கணம் பின்வரும் பாசுரத்தால் அறியக்கிடக்கின்றது:-

ஓதுசமயங்கள்பொருளுணருநூல்கள்
ஒன்றோடொன்று
ஒவ்வாமலுள பலவுமிவற்றுள்
யாதுசமயம்பொருணூல்யாதிங்கென்
னினிதுவாகும்
அதுவல்ல தெனும் பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே
காணநின்றதுயாது
ஒருசமயமது சமயம் பொருணூல்
ஆதலினு னிவையெல்லா மருமறை
யாகமத்தே
அடங்கியிடு மவையிரண்டு மரன
டிக் கீழடங்கும்.

இவ்விலக்கணத்திற்கு இயைபுடையது சைவசமயமொன்றே. இச் சமயம் 36 தத்துவங்களையும் கீழ்ப் பொருள்களாகக் காட்டி உண்மைப்பொருளாகிய இறைவனோடு உயிர்களைச் சேர்ப்பது. ஏனைப் புறச் சமயங்கள் சைவசமயமாகிய பேராற்றின் கிளையாறுகளாக அவற்றிலுள்ள நீரெல்லாம் அதனைச் சேர்ந்தே கடலாகிய சிவபிரானை யடையுமாதலால், உயிர்கள் மெய்யறிவு வளரவளரக் கடைசியாக முத்தி நெறியாகிய சைவசமயத் துறையை அடைந்து சரியை கிரியை யோகம் என்னும் படிகள் வாயிலாகச் சிவஞானத்தில் மூழ்கிச் சிவனடியைச் சேரும். இதர சமயங்கள் சைவசமயத்தின் கீழ்ப்படிகளாதலின் அதனைச் சேர்ந்தவையே. ஆனால் அவைகள் அவ்வந் நிலைக்கேற்ற தொடர்புண்மைகளன்றி நிலையான உண்மைகளாகா. நிலையான இறுதியுண்மை பயப்பது சைவசமயமொன்றே. இதனால் இது முத்திநெறி, நன்னெறி என்று கூறப்படும்.

சைவ நியமப்படி ஞானகுருவைக் கடவுளாகப் பாவிப்பது மரபு. இச் சம்பிரதாயத்தை யொட்டிப் போற்றிப்பஃறொடையின் ஆசிரியராகிய உமாபதிசிவம் தமது ஆசிரியாராகிய மறைஞானசம்பந்தரை இறைவனாகப் போற்றி வழிபடுகின்றார். பண்டார மும்மணிக் கோவையில் குமரகுருபரர் தமது ஞானாசாரியராகிய மாசிலாமணி ஞானசம்பந்தரைச் சிவபெருமானாகவே போற்றிப்பாடியிருப்பது இங்கே கவனிக்கத் தக்கது, நமது அன்பர் இதனைத் தவறாக விளங்கிக் கொண்டு கடவுள் மனிதனாகப் பிறத்தல் சைவத்திற்கும் உடன்பாடென்று கூறுவது பிழையுடைத்தாம் சிவபிரான் பிறப்பு இறப்பு இல்லாதவர். பிறப்பு இறப்புடையவர் ஒருபோதும் கடவுளாகார். பிறப்பவையெல்லாம் உயிர்களேயாம்.

"யாதொரு தெய்வங் கொண்டீரத்
தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர்
மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படு மிறக்கும் பிறக்கு
மேல்வினையுஞ் செய்யும்
ஆதலானிவை யிலாதா னறிந்தருள்
செய்வனன்றே."

"எல்லார் பிறப்பு மிறப்பு மியற்
பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேம் நஞ்
சோணேசர்—இல்லிற்
பிறந்த கதையுங் கேளேம் பேருகில்
வாழ்ந்தாண்டு
இறந்த கதையுங் கேட்டிலேம்."

என்னுஞ் செய்யுட்கள் சிவபிரானது பதித் தன்மையைக் காட்டுவன.

இனி, சீவன்முத்தர்களின் தன்மையைச் சிறிது ஆராய்வாம். சீவன்முத்தராவார் பரமஞானிகள்; பெரிய புராணத்திற் கூறப்படும அடியவரெல்லாம் சீவன் முத்தரே. அவர்களுடைய இலக்கணத்தைப் பின்வரும் திருவிருத்தங்களால் அறியலாம்:-

"பூதமைந்து நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பி
[லார்
ஓது காதலுறைப் பினெறி நின்றார்
கோதிலா தகுணப்பெருங்குன்றனார்."

"கேடுமாக்கமுங் கெட்ட திருவினார்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்
[குவார்
கூடுமன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டாவிறலின் விளங்கினார்."

"ஆரங்கண்டிகையாடையுங்கந்தையே
பாரமீசன் பணியல தொன்றிலார்
ஈரவன்பினர் யாதுங் குறைவிலார்
வீரமென்னால் விளம்புந்தகையதோ."

மாணிக்கவாசகப் பெருமானும் சீவன் முத்தரே. அவருடைய நிலையைப் பின்வரும் திருவாசகம் புலப்படுத்தும்:-

"வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ
வேண்டியென்னைப் பணிகொண்
வேண்டிநீ யாதருள் செய்தா [டாய்
யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டுபரி சொன்றுண் டென்னி
லதுவு முன்றன் விருப்பன்றே."

இன்னோரன்ன இலக்கணங்களுக்கு அருகரல்லாத முக்குணவசத்தரையாம் எப்படிச் சீவன் முத்தர் என்று கூறத் துணியலாம்.

புத்தன்முதலாய புல்லறிவிற்பல்சமயந்
தத்தமதங்களிற் றட்டுளுப்புப் பட்டு
நிற்க
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவேதவ
மாக்கும்
அத்தன் கருணையினாற் றோணோக்க
மாடாமோ

சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை.
20-9-46.

## கணேச நூல்நிலையத் திறப்புவிழா

ஷை நூல்நிலையம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு இந்துவாலிப சங்க ஆதரவில் விஜயதசமித் திருநாளன்று (5-10-46) பிற்பகல் 5 மணியளவில் நியாயதுரந்தரர் பூ. இளையதம்பி அவர்களால் திறந்துவைக்கபபட்டது. அத்தருணம் திருவாளர்கள்: K. C பாலசுப்பிரமணிய ஐயரவர்களும், P. பொன்னம்பலம் ஆசிரியர் அவர்களும் 'நூல்நிலையம்', 'நவராத்திரி' என்பன பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

—கடித.

## கும்பாபிஷேக காலத்தில்

### தானியாதிவாசம் ஜலாதிவாசம் செய்வதற்கு நியாயமும் பிறவும்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள்

முதன்முதல் கும்பாபிஷேகஞ்செய்யும் விக்கிரகம் நெல்லினால் மூடிக் குறித்த நாள்வரையும் இடப்படும். இதனால் அந்த விக்கிரகத்திற்கு பிருதிவி பூதசக்தி சேருகின்றது. இதுவே தானியாதி வாசமாம். பின் அப்புவின் பூதசக்தி சேரும்பொருட்டு சிலகாலம் தண்ணீரில் இட்டு வைக்கின்றார்கள்; இதுவே ஜலாதிவாசமாம். அதன்பின் ஓமாக்கினியில் எருக்குப் பலாசு நாயுருவி முதலிய சமித்துக்களையும் நெய், பால், தேன், நெற்பொரி பழம் முதலியவற்றையும் மந்திரபூர்வமாக ஓமஞ் செய்வார்கள். இது தேயு பூதசக்தியாம். அவற்றாலுண்டாகும் புகையை பூதசக்தியிலுள்ள அந்த விக்கிரகம் தன்னிடத்தே கிரகித்துக்கொள்ளும். அத்தருணத்தில் பிராமணர்கள் கூடி வேதாத்தியயனஞ் செய்வார்கள், தமிழ்வேத பாராயணமுஞ் செய்வார்கள். இவர்களின் பார்வையாலும் தொனியாலும் மனுஷசக்தி அவ்விக்கிரகத்திற் சேரும்.

ஔஷதம் [சமித்துக்களின் சக்தி] பாசுசம் [சீவப்பிராணிகளிலுள்ள சக்தி] லௌகீகம் [உலோகங்களிலுள்ள சக்தி] இந்த மூவகைச் சக்திகளையும் ஒன்றுபடச் சேர்த்துப் பிராணப் பிரதிஷ்டை யுண்டாக்கப்பட்ட சொரூபமே விக்கிரகமெனப்படும். சிலை [கல்] களினால் உலோகாச்சமுள்ளவற்றைத் தேர்ந்தெடுத்து விக்கிரகஞ் செய்யவேண்டும் எல்லா உலோகங்களிலும் செம்பு, பித்தளை முதலிய தேயு அம்சம் நிறைந்ததும் மின்சார சக்தியுள்ளதுமான ஐந்துவகைஉலோகங்களைக் கூட்டியே செய்யவேண்டும்; பஞ்சலோகங்கள் சேர்ந்த இந்தச் சொரூபம் நமது சரீரத்திலுள்ள பல சக்தியை நீக்கவும், இரத்தசுத்தி செய்யவும் ஆரோக்கியத்தை யுண்டாக்கவும் வல்லதென்பது கண்ட அனுபவம். அவற்றைவிடப் பெரிதாகச் செய்யப்பட்ட விக்கிரகங்களுக்கு அதிக சக்தியுண்டென அறியக்கிடக்கின்றது.

சில சிலா விக்கிரகங்களிலே சீதோஷ்ண சக்திகள் இயற்கையிலே அமைந்திருக்கின்றன. அச்சிலைகளுக்கு மின்சாரசக்தி சுபாவத்திலேயே யமைந்திருத்தலால் அச் சிலைகளில் தெய்வ சொருபமாகிய விக்கிரகஞ் செய்யப்படுகின்றது. விக்கிரகத்திற்குக் கீழே இன்ன இன்ன திக்கிலே இன்ன இன்ன இரத்தினம் வைக்க வேண்டுமென்ற நியதியும், அந்த அந்த மூர்த்திக்குரிய யந்திரத் தகட்டையும் வைத்தல் பிராணசக்தி வர வேண்டுமென்னும் நோக்கமுமாம். இந்த விசேஷம் பொருந்திய விக்கிரகத்தைப் பார்த்து, புத்திரபாக்கியம் வேண்டும்என நேர்கடன்பண்ணினால் எண்ணியஎண்ணம் அநுகூலமாவது இந்த விசேடத்தாலென்பதை ஊன்றி நோக்குக.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் அக் 16

காலை 7.15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 வி கல்யாண நாராயணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 8.30 திருவிழுந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 வி கல்யாண நாராயணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 வி கல்யாண நாராயணன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 மைசூர் டி சௌடையா வயலின் 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7.15 வாமொழி வாத்யகோஷ்டி 7-30 தமிழில் செய்திகள் 7.45 திரைப்பட விமர்சனம் 8 திருவிழுந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 8-30 டி சௌடையா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஐரோப்பிய சங்கீதம் 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஆங்கில நிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10 30 முடிவு.

### வியாழன் அக் 17

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மன்னார்குடி கே சூர்யா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருப்புகழ்மணி இசைத்தட்டு 8-30 மி கே கலிபுல்லா பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 மன்னார்குடி கே சூர்யா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 கும்பகோணம் ஏ ராதாகிருஷ்ண பிள்ளை பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 மி கே கலிபுல்லா பாட்டு 7-15 செய்திவிளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 டி ஏ நடேசய்யர் பாகவதர்பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சாமர்த்ய நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 கும்பகோணம் ஏ ராதாகிருஷ்ணபிள்ளை பாட்டு 10.30 முடிவு.

### வெள்ளி அக் 18

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எஸ் கமலா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 வி மி லட்சுமிநாராயணமேனன் பாட்டு 9 முடிவு

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் எஸ் கமலா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் எஸ் கமலா பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை: 5 கே மி காளிதாஸ் பிள்ளை நாகஸ்வரம் 5-40 குரான்ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6.15 கிராமநிகழ்ச்சிகள் 7 இசை குரலிசை இசைத்தட்டு 7-15 வாத்தியார் விசாரம் பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7-45 கே மி காளிதாஸ்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில்செய்திகள் 9.15 தில்லானா கோட்டுவாத்தியம் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை ஆங்கில 9.45 இசைக்கச்சேரி 10-30முடிவு.

## விளம்பரம்

### உணவு அளவில் மாற்றம்

1496ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் (18-வது வார உணவு விகிதம்) வேறு அறிவித்தல் கொடுக்கும்வரை பின்வரும் விகிதம் உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்படும்.

| வகுப்பு | அரிசி (கொத்து) | அல்லது | நெல்லு கொத்து) | கோதுமைமா (ருத்தல்) |
|---|---|---|---|---|
| குழந்தை | $\frac{1}{2}$ | , | 1 | $\frac{1}{2}$ |
| பிள்ளை | $\frac{3}{4}$ | ,, | $1\frac{1}{2}$ | $\frac{3}{4}$ |
| சாதாரணம் | 1 | ,, | 2 | 1 |
| வேலையாள் | $1\frac{1}{4}$ | ,, | $2\frac{1}{2}$ | $1\frac{1}{4}$ |

பிரதி உணவுக் கூப்பன்களுக்கு அரிசி அல்லது நெல்லு 14-ம் திகதி தொடக்கம் கொடுக்கப்படமாட்டாது. அதற்குப் பதிலாக கோதுமைமா கொடுக்கப்படும்.

ஆர். சிந்தாமணி,
யாழ்ப்பாணம் உதவி உணவுக்கட்டுப்பாட்டுத் தலைவருக்காக.

10-10-46

(G 93 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### காங்கிரஸ் - லீக் சமரசம் இல்லை

போபால் நவாப் இப்போது சில நாட்களாகச் செய்துள்ள முயற்சிகளின் பயனாக, காங்கிரசிற்கும் முஸ்லிம் லீகிற்குமிடையே சமரசம் ஏற்படும் என்ற நம்பிக்கை யிருந்துவந்தது. ஆனால் பிந்திக் கிடைத்துள்ள தந்திச் செய்திகளை அவதானிக்குமளவில் அப்படியான நம்பிக்கைக்கு இடமில்லை என்று தெரிகிறது. காங்கிரஸ்-லீக் சமரசப் பேச்சுக்கள் முறிந்துவிட்டனவென்று ஓர் செய்தி கூறுகிறது ஆனால் சமரசப் பேச்சுக்கள் முறிந்துவிட்டபோதிலும் முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றித் தனக்குரிய 5பிரதிநிதிகளை அங்கே நியமிக்கும் என்று இன்னொரு செய்தி கூறுகிறது. முஸ்லிம்லீக் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றுமானால் அது காங்கிரசின் வேண்டுகோளுக்கிணங்கியல்ல; இராஜப் பிரதிநிதி வேவலின் அழைப்புக்கிணங்கியேயாகும் என்று முஸ்லிம் லீக் வட்டாரங்கள் கூறிக்கொள்ளுகின்றன. எது எப்படியிருந்தபோதிலும், இடைக்கால அரசாங்கத்தில் பங்குபற்றுவதைக் காங்கிரஸ் வரவேற்கும் என்பதில் ஐயமில்லை. அப்படி லீக் இடைக்கால அரசாங்கத்திற் சேருமானல் ஜின்னாவும் அரசாங்கத்திற் சேருவாரா? அநேகமாக அவர் சேரமாட்டார்: அவருடைய கையாட்களே அங்கே போவர் என்று சொல்லப்படுகிறது,

O

### நன்மைக்கா? தீமைக்கா?

இப்படியான ஓர் நிலையில் முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்திற் சேருமாயின் அதனால் நன்மையா? தீமையா? என்ற ஓர் பிரச்சினை இப்போது அடிபடுகிறது. இராஜப்பிரதிநிதியின் கேள்விக்காக மாத்திரம் இணங்குவதாயின் முஸ்லிம்லீக் முந்தியே இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்திருக்கலாமே. அப்படி இதுவரை சேராமல் இருந்ததினால், ஏதும் நன்மைகளை அல்லது தனது கோரிக்கைகளை லீக் இப்போது பெற்றுவிட்டதா? கல்கத்தா பம்பாய் முதலிய சில இடங்களில் சில மண்டைகள் உடைபட்ட ஓர் நன்மையைத்தான் லீக் கண்டது. வேறெந்த விதத்திலும் அரசாங்கத் திட்டத்தில் முஸ்லிம் லீக் விரும்பியபடி மாறுதல் எதுவும் நடக்கவில்லை. ஆகவே இப்போது ஜின்னா குட்டிக்கரணம் போட்டு, தான் வெறுத்தொதுக்கிய இடைக்கால அரசாங்கத்திற் சேருவாராயின் அதற்குத் தகுந்த ஓர் காரணம் இருக்கத்தான் வேண்டும். அக்காரணம்தான் என்ன?

O

### சதியாலோசனையா ?

சென்றசெப்டெம்பர்மீ 2-ந்திகதி இடைக்கால அரசாங்கத்தை நிர்வகிக்கும் பொறுப்பைப் பண்டித ஜவஹர்லால் நேரு கையேற்ருர். அன்று தொட்டு இன்றுவரை அவர் பலமகத்தான மாறுதல்களைச் செய்துவிட்டார். பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் தலைகாட்டிய நாள் தொடக்கம் இராஜப் பிரதிநிதியே சர்வாதிகாரியாக இருந்தார். அவர் மூலமாகவே சகல கருமங்களும் ஆற்றப்பட்டு வந்தன. பண்டிதர் நேரு போனதும், அந்த வழக்கங்களையெல்லாம அப்படியே துடைத்தெறிந்துவிட்டு ஓர் பூரண சுயாட்சி பெற்ற நாட்டிற் பிரதம மந்திரியானவர் எப்படிக் கருமம் ஆற்றுவரோ அப்படிக் கருமம் ஆற்றத் தலைப்பட்டார். அவர்க்குதவியாக அவருடைய 11சகாக்களும் பலமாகநின்றனர். பிரிட்டிஷ் உத்தியோக வர்க்கம் நடுங்கியது. அதிகாரவர்க்கம் வெகுண்டது. அவர்கள் தாங்கள் கனவிலும் எதிர்பாராத அளவுக்குப் பண்டிதர் நேருவும் அவர் சகாக்களும் ஒற்றுமைபூண்டு கருமம் ஆற்றிப் பல சம்பிரதாயங்களை ஆக்கிவிட்டனர். இவை எல்லாம் உத்தியோக வர்க்கத்துக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தன. தங்கள் பழைய செல்வாக்கு எல்லாம் தலைகீழாகக் கவிழ்வதைக் கண்டனர். வேவலை அண்டினர், அபயமிட்டனர். வேவல், பிரிட்டிஷார்க்குச் சுலபமாயுள்ள பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைப்பிடிக்கத் தலைப்பட்டார்.

## இலங்கையின் எதிர் காலம் என்ன?

இப்போது இந்த இலங்கையில் ஏறக்குறைய 26000 பேர் இராணுவத்திலிருந்து நீக்கப்பட்டு எவ்வித வேலையுமற்று இருக்கின்றனர். இவர்களின் எதிர்காலம் என்ன? இற்றைக்கு ஓர் ஆண்டு காலத்துக்கு முன் இந்த இலங்கையரசாங்கம் இராணுவத்திலுள்ளவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான ஓர் திட்டத்தை வகுத்தது. அத்திட்டத்தின் கதி இப்போது எப்படி முடிந்திருக்கிறது இராணுவத்திலிருந்து நீக்கப்பட்ட 26000 பேரில், அரசாங்கம் ஏறக்குறைய 400 பேர்க்குத்தான் இதுவரை வேலை தேடிக் கொடுத்திருக்கிறது அப்படியென்றால் மீதியாயிருக்கும் ஆயிரக் கணக்கானோர் என செய்யப்போகின்றனர். ஒன்றுக்கும் பயன்படாத் திட்டங்களைக் கடுதாசியில் அச்சிட்டு விடுவதோடு தம் கடமை தீர்ந்துவிட்டது என இலங்கை அரசாங்கம் நினைக்கிறதா? வெள்ளம் வருமுன் அணைகோலுதல் அறிவுடையர் கடமை. மிகவும் நெருக்கடியான காலம் ஒன்று இந்த இலங்கையைநோக்கி இருக்கிறது. பணமுட்டு வேலையின்மை என்பன இந்நாட்டைப் பற்றி வருத்த இருக்கின்றன. ஆகவே, இப்போதே இந்த ஆபத்தினின்றும் தப்ப இலங்கை அரசாங்கம் கருமம் ஆற்றவேண்டும். அன்றேல் விளையப்போவது அநர்த்தம் தான்.

O

### ஜின்னாவுக்கு அழைப்பு!

காங்கிரசின் ஒற்றுமையைக் குலைத்துத் தன் சர்வாதிகாரத்தை மீண்டும் நாட்டவேண்டுமாயின் முஸ்லிம் லீக் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றவேண்டும் என்பதை அதிகார வர்க்கம் உணர்ந்தது. அல்லாவிட்டால் தன்னையும் பிரிட்டிஷ் மந்திரிகளையும் தாறுமாருகத் தூஷித்த ஜின்னாவை இராஜப் பிரதிநிதி அழைக்கவேண்டியதன் காரணம் என்ன? முஸ்லிம்லீக் இடைக்கால அரசாங்கத்திற் பங்குபற்றுமாயின், அங்கே இரு கட்சிகளிருக்க, மூன்ரும் பேர்வழியான தான் தனது பிரித்தாளும் தந்திரத்தைப் பூரணமாக அமுல் நடத்தலாம் என்ற காரணம் கொண்டே, முஸ்லிம் லீக்கை இடைக்கால அரசாங்கத்திற் சேரும்படி தூண்டியிருக்கிறது என்பதற்கு ஐயமில்லை என்றும் கூறலாம்.

O

### உத்தியோகபூர்வமான அறிக்கை

முஸ்லிம்லிக் இடைக்கால அரசாங்கத்திற்சேரத் தீர்மானித்துவிட்டதாக ஓர் உத்தியோகபூர்வமான அறிக்கை கூறுகிறது. இடைக்கால அரசாங்கத்தில் முஸ்லிம் லீக்கிற்கெனவுள்ள 5 ஸ்தானங்களுக்கு யார்யாரை நியமிப்பது என்ற விஷயம் ஜின்னாவின் தீர்மானத்துக்கு விடப்பட்டிருக்கிறது. அநேகமாக ஜின்னா இந்த அரசாங்கத்திற் சேரமாட்டார் என்று சொல்லப்படுகிறது.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

ஒண்ணகை யுயிர்க்குஞ் சங்க மொருசில கமலம் வைகத்
தண்ணறு நறவைப் பலருட் டாமரை பரித்துச் சூழ்தல்
அண்ணலம் பொய்கை தற்சே ரறுமுகப் பிள்ளை துய்ப்ப
வெண்ணெயுஞ் சங்குஞ் சூழ விட்டது போலு மன்றே

ஒளி பொருந்திய முத்தையீனும் சங்குகள் ஒரு புறத்தேயுள்ள சில தாமரைப் பூக்களிற் பொருந்த, நாளத்தோடு கூடிய பல தாமரை மலர்கள் குளிர்ந்ததேனைப்பிலிற்றியவண்ணம்சூழ்ந்துநிற்றல்,பெருமையினையுடைய அழகிய சரவணத் தடாகமானது தன்னையடைந்தஆறுதிருமுகங்களைக்கொண்ட அக்குழந்தைஉட்கொள்ளும்வண்ணம் எண்ணெயுடன்பாலடைச்சங்குகளைச் சூழவைத்த தன்மையை யொக்கும் என்பது கருத்து.

ஒருசில கமலத்தில் சங்கம் வைக, பல தாமரை மலர்கள் நறவைப் பரித்துச் சூழ்தல் ... .... எண்ணெயுஞ் சங்குஞ் சூழ இட்டது போலும் எனக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்க. எண்ணெயை யுட்கொளும் குழந்தைப் பருவமாதலின் "அறுமுகப்பிள்ளை" என்ருர். அறுமுகங்களிலும் பொருந்திய திருவாய்கள் மூலம் உட்கொள்ளும் வண்ணம் எண்ணெயுஞ் சங்குஞ்சூழ இடப்பட்டனவென்க; சரவணத் தடாகத்தைச் செவிலித்தாய்க்கும் செந்தாமரைப் பூவை அச்செவிலித்தாயின் கைக்கும், சங்கினைப் பாலடைச் சங்கிற்கும் தேனை எண்ணெய்க்கும் ஒப்புக் கூறியவாரும்; "வெண்ணெயுஞ் சங்குஞ்சூழ விட்டதுபோலும்" எனக் கண்ணழித்து அதற்கியையப் பொருள்கொள்வாருமுளர்;

[ஒண்ணகை யுயிர்க்கும் - ஒளி பொருந்திய பிரபையையுடைய முத்தையீனும்; ஒண்ணகை, ஆகுபெயர்; நகைமுடி யென்பதற்கு - முத்துமுடியென நச்சினர்க்கினியர் கூறியவாற்ருனு முணர்க; மாந்தம் முதலிய நோய் பீடிக்காவண்ணம் விளக்கெண்ணெயைச் சங்குடன் சூழ வைத்ததுபோலு மென்பதாம்; விளக்கெண்ணெய் - ஆமணக்கம் நெய்; இதனோடு தாரச்சாறு முதலிய சில சரக்குக்களைச் சேர்த்துப் பாகம்பண்ணிக் குழந்தைகளுக்கு ஊட்டுதல் உலகவழக்கு; இவ்வழக்கையொட்டியே (ஆசாரிய சுவாமிகள்) இங்ஙனங் கூறினரென்க] (107)

ஆரமும் வனசத் தோடு மணிமக ரந்தச் சேறும்
வேரியம் பூந்தண் டேனு முறைமுறை வீசிக் கையாற்
சேரவே கொண்டு மேலோன் றிருவடி தீளப்ப வுய்த்தல்
வாரியந் தடாக மன்பால் வழிபடும் வண்ணம் போலும்.

முத்துக்களையும் தாமரைப் பூக்களின் இதழ்களையும் நிறம் விளங்கும் பூந்தாதின் குழம்பையும் வாசனை பொருந்திய அழகிய தாமரை மலர்களிலுள்ள குளிர்ந்த தேனையும் நீர்ப்பெருக்கோடு கூடிய அத் தடாகமானது, முறைமுறையே தன் திரைகளாகிய கைகளினால், முழுமுதற் கடவுளாகிய சண்முகமூர்த்தியின் திருவடிகளிற் படியக்கொண்டுபோய்ச்சேர்த்தல், அத்தடாகமாகிய பெண்ணானவள் பத்தி மேலீட்டினால் (மேலே சொல்லப்பட்ட திரவியங்களை) வைத்து வழிபடுகின்ற தன்மையை நிகர்க்கும் என்பது கருத்து

இறைவனைப் பத்தியுடன் பூசித்து வழிபடுவோர் அர்ச்சனை நிவேதனங்கட்காகிய திரவியங்களை முறைப்படி சாத்தியும் நிவேதித்தும் வழிபடுதல் நியதியாதலின் "முறை முறை" என்ருர். வழிபாட்டைக் குறிக்கும்போது ஆரத்திற்குச் சந்தனமெனப் பொருள் கொள்க: மேலோன்-பரம்பொருளாகிய சண்முகமூர்த்தி; அன்பால் - அன்பினோடு, மூன்ரும் வேற்றுமை உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. (108)

பங்கயச் செம்மற் போது பதனழிந் தவிழ்ந்த பாங்கர்
அங்குள விலைமேல் வீழ வவைபுறத் தசையு நீர்மை
சங்கரன் குமரன் சூழச் சரவணப் பசும்பூந் தட்டிற்
றுங்கநல் விளக்க மாட்டித் திரைக்கையாற் சுலவல் போலும்.

பழைய தாமரைப் பூக்கள் பருவங் கழிந்து உதிர்ந்து அத்தடாகத்திற்றனே பக்கலிலுள்ள தாமரையிலையின் மீது வீழ்ந்து கிடப்ப, அத் தாமரையிலைகள் புறத்தில் அசைந்துகொண்டு நிற்குந் தன்மை, சரவணத் தடாகமானது சிவகுமாரராகிய சண்முகப் பெருமானரைச் சுற்றி, பசிய பூந்தட்டினிலே ஒளியோடு கூடிய தீபத்தைக் கொளுத்தித் திரையாகிய கைகளினால் ஆலத்தி யெடுப்பதை நிகர்க்கும் என்பது கருத்து. புறம் - சங்கரன்குமரன் புறமாம்: முன்னிலையி லென்றபடி; சூழச்சுலவல் போலுமெனக் கொண்டு கூட்டிப்பொருள்கொள்க;

சரவணத் தடாகமாகிய நங்கையானவள் தாமரை யிலையாகிய தட்டிலே இதழாகிய தீபத்தையேற்றித் தன் திரைக்கரங்களில் ஏந்தி அறுமுகச் சேய்க்குத் திருஷ்டிதோஷந்தீர ஆலத்தி யெடுத்தவாறென்பதாம்.

[சரவணம், எழுவாய்; இவ்வாறு செய்வது திருஷ்டி தோஷந் தீரவென்க.] (109)

### திருத்திக்கொள்க

சென்ற வெள்ளிக்கிழமை (11-10-46) வெளிவந்த இந்துசாதனப் பிரசுரத்தில் "அறுபதாமாண்டு நிறைவுவிழா நிதி" என்ற தலையங்கத்தின்கீழ், ஸ்ரீமதி M. சுப்பிரமணியம் ஆசிரியை எனவும், திருவாளர் M. கதிரிப்பிள்ளை ஆசிரியர் எனவும் [illegible]யவை, S. சுப்பிரமணியம் ஆசிரியர் எனவும், ஸ்ரீமதி M கதிரிப்பிள்ளை, ஆசிரியை எனவும் தவருக வெளிவந்துவிட்டன; இவற்றைத் திருத்தி வாசித்துக் கொள்க: நேர்ந்த தவறுதலின் பொருட்டுப் பச்சாத்தாபப்படுகின்றேம்.

—பத்திராசிரியர்

### 56000 பேர் குற்றவாளிகள்

சமீப காலத்தில் நிகழ்ந்த கல்கத்தாக் கலகத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள விசாரணையில் 56000 பேர் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தசேத நஷ்டக் கட்டணங்களைத் திருப்பிக் கொடுத்தல்

## ( அசைவற்ற ஆதனங்கள் மாத்திரம் )

யுத்த நஷ்டப் பணத்தைத் திரும்பிப் பெறுவதற்குச் சரியான காலத்தில் விண்ணப்பஞ்செய்து இதுகாறும் பணம் பெறுதவர்கள் தங்களின் தற்போதைய விலாசத்துடன் ஆதனங்களின் வரிமதிப்பு இல, ஆதனங்க ளிருக்குமிடம், இக்கந்தோரின் விண்ணப்ப இல, ஆதியவற்றை விபரமாக இவ்விலாகாவிற்கு எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்.

(2) 1943-ம் ஆண்டிலும், 1944-ம் ஆண்டிலும் கட்டவேண்டிய பணத்தைத் தவறுது கட்டி, 1945-ம் ஆண்டு 53-ம் இல, யுத்தநஷ்ட அசைவற்ற ஆதன (ரத்துச் செய்தல்) சட்டப்படி 1946-ம் ஆண்டு பெப்ருவரி மாசம் 13-ந் திகதிக்கு முன் தமக்குரிய விகிதப் பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கு விண்ணப்பஞ் செய்யாதவர்கள், பின்வரும் விபரங்களுடன் 1946-ம் ஆண்டு அக்டோபர்மாசம் 31-ந் திகதியன்று அல்லது, அதற்குமுன் கிடைக்கத்தக்கதாக எனக்கு விண்ணப்பஞ் செய்யவேண்டும். கட்டிய பணத்தின் ஒருபாகத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக அரசாங்கத்திற்கு விண்ணப்பஞ் செய்யப்பட் டிருக்கிறதென்பதை இத்தால் தெரிவிக்கின்றேன்:

(A) விண்ணப்பகாரரின் பெயரும், விலாசமும்

(B) ஆதனங்களின் (வீமாத்தீர்ந்த காலத்து) வரிமதிப்பு இல

(C) ஆதனங்களிருக்கும் தெருவின் பெயரும், வட்டாரப் பெயரும்,

1943-ம் ஆண்டு 4-ம் குவாட்டர், 1944 ம் ஆண்டு 2-ம் குவாட்டர் காலத்து வரிமதிப்பு ரசீதாவையும், யுத்தநஷ்டப பணங்கட்டிய ரசீதாவையும் விண்ணப்பகாரர் அனுப்பினுல் விண்ணப்பங்களைக்கெதியில் தீர்க்கமுடியும். விண்ணப்பக்காரரின் பெயர்ரசீதாவிலுள்ள பெயரினின்றும் வித்தியாசப்பட்டால் அதற்குத் தகுந்தகாரணம் காட்டவேண்டும். பணம் கட்டியவரல்லாது வேறுயாராவது பேரில் ரசீது கொடுபட்டிருந்தால், அவரிடமிருந்து உரித்தாளர் பணத்தைத் தான் பெறுவதற்குத் தபால் கொண்டுவரவேண்டும். இறந்தவர்களின்பெயரால் விண்ணப்பஞ் செய்திருந்தால் தத்துவகாரர் தங்களின் தத்துவ உரிமையை ருசு செய்யவேண்டும்: அல்லது தத்துவவழக்கு இலக்கத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(3) விண்ணப்பங்கள் கிடைத்ததும், அதற்கத்தாட்சியாக இவ்விலாகா விண்ணப்ப இலக்கங்கள் விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படும். பணந் திருப்பிப் பெறும் விஷயமாக இவ்விலாகாவிற்கு எழுதும்பொழுது அவ்விலக்கத்தைத் தெளிவாகக் குறிக்கவேண்டும்,


அரசாங்கசபை பணங்கொடுப்பதற்கு அனுமதி செய்தபின்பே, கட்டணங்களைத் திருப்பிக் கொடுக்கமுடியும்.

எவ். லீச்,

யுத்த நஷ்ட வீமாத்தீர்தற் பதில நிகாரி.

கொழும்பு.
27-9-46.

G. 82, 1&15-10-46.




எங்கும் கியாதிபெற்ற எமது

ரேடியோ பீடிகளையே

எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

எல்லாஊர்களிலும் கிடைக்கும்

மொடேண் ஏஜென்சீஸ்,

சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

# பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

# கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் றுத்தல் விலை ரூபா 5.00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மேடிக்கல் ஹோல்

வல்வெட்டித்துறை.

Mis 27 26-4—25-10 (செ)

# ஜீவாதார வைத்திய விளம்பரம்

நாடிப் பரீட்சையுடன்
3 நாள் 6 வேளை மருந்து 10 ரூபா
ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,

க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்

(Mis 160 30-8—30-11-46)

## வடநீர்வை ஸ்ரீ விநாயகர் வாசிகசாலை

ஷ்டிவாசிகசாலையில் வியஆு புரட்டாதிமீ 19உ (5-10-46) சனிக்கிழமை மாலை 6 மணியளவில் திரு. தம. அரியகுட்டி தலைமையின்கீழ் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. அத்தருணம் பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களால் "விஜயதசமி" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தப் பெற்றது. அதன்பின் வருங்கால உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

—கடித.

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆு வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஇடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கொடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**

91, முதலாம் குறுக்குத்தெரு,

Mis 154 29-11-45—30-11(தி) புறக்கோட்டை, கொழும்பு.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, October, 15, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org